# கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 2 (சவுல்)



இத்தியானத்தின் பாகம் ஒன்றில் நாம் எவ்வாறு லோத்து தனக்கு அளிக்கப்பட்ட கிருபையான தருணங்களையும், சூழ்நிலைகளையும், ஐக்கியத்தையும், உலக பிரகாரமான சம்பத்தையும், என யாவையும் இழந்தவராய், ஆண்டவர் அவர் வாழ்க்கையில் எத்தனை தரமோ இடைப்பட்டும், அவரைக் காப்பாற்ற நினைத்தும், அவை அனைத்தையும் போக்கடித்தவராய் நம் எல்லாருக்கும் ஒரு எச்சரிப்பின் செய்தியாய் தன் வாழ்க்கையை வாழ்ந்து முடித்தார் என்பதை தியானித்தோம். இப்பொழுது, இத்தியானத்தின், இரண்டாம் பாகத்தில் லோத்தை போல தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையை போக்கடித்தவரான சவுல் ராஜாவை குறித்து தியானிக்க போகிறோம்.

இஸ்ரவேலின் மூப்பர்கள், நியாயதிபதியும் தீர்க்கதரிசிமாய் இருந்த சாமுவேலிடம் வந்து சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். **“அப்பொழுது இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் கூட்டங்கூடி, ராமாவிலிருந்த சாமுவேலினிடத்தில் வந்து: இதோ, நீர் முதிர்வயதுள்ளவரானீர்; உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை; ஆகையால் சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்றார்கள்.“** ( 1 சாமு 8:4,5). இது சாமுவேலுக்கு தகாததாய் காணப்பட்ட படியினால் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார் (1 சாமு 8:6). **“அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி: ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்.“** (1 சாமு 8:7) என்றார்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலேயே மக்கள் கேட்டபடி, சவுல் இஸ்ரவேல் மக்களுக்கு ராஜாவாக கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன் தகப்பனாருடைய கழுதைகளை தேடி வந்த அவருக்கு ராஜ மேன்மை எந்த சிரமமும் இன்றி எளிதாக கிடைத்தது. இது ஆரம்பத்தில் அவருக்கே ஏற்றுக் கொள்ள முடியாத அளவு ஆச்சரியமுடையதாய் இருந்தது. **1 சாமு 9:20,21** கூறுகிறது **"மூன்றுநாளைக்கு முன்னே காணாமற்போன கழுதைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்; அவைகள் அகப்பட்டது; இதல்லாமல் சகல இஸ்ரவேலின் அபேட்சையும் யாரை நாடுகிறது? உன்னையும் உன் வீட்டார் அனைவரையும் அல்லவா? என்றான். அப்பொழுது சவுல் பிரதியுத்தரமாக: நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்துக் குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா? நீர் இப்படிப்பட்ட வார்த்தையை என்னிடத்தில் சொல்வானேன் என்றான்."** ஆம் தான், தன் குடும்பம், தன் கோத்திரம் ஆகிய இவை இஸ்ரவேலில் எவ்வளவு சிறியது என்பதை அவர் அறிந்திருந்ததால் அதையே சாமுவேலிடம் அறிக்கை விட்டார். **1 சாமு 10:1 இல் "அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை முத்தஞ்செய்து: கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா?"** என்றார். மேலும் ஆண்டவர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான சில அடையாளங்களையும் கொடுத்தார் **(1 சாமு 10:2-9)**.

ஆனால் சவுல் இதைப்பற்றி யாரிடமும் பேச கூட இல்லை. காரணம் இது தன் பலத்திற்கு மிஞ்சினது, தேவனுடைய சுத்த கிருபை என்பதை அவர் அறிந்திருந்தார். இதனால் ஆண்டவர் சகல இஸ்ரவேலருக்கும் முன்பாக முறைப்படி அவரை ராஜாவாக தேர்ந்தெடுத்த பொழுது கூட, அந்த இடத்திற்கு வராமல் தன்னை ஒளித்துக் கொண்டார். **"அவன் பென்யமீன் கோத்திரத்தை அதினுடைய குடும்பங்களின்படியே சேரப்பண்ணினபின்பு, மாத்திரி குடும்பத்தின்மேலும், அதிலே கீசின் குமாரனாகிய சவுலின்மேலும், சீட்டு விழுந்தது; அவனைத் தேடினபோது, அவன் அகப்படவில்லை. அவன் இனி இங்கே வருவானா என்று அவர்கள் திரும்பக் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது: இதோ, அவன் தளவாடங்களிருக்கிற இடத்திலே ஒளித்துக்கொண்டிருக்கிறான் என்று கர்த்தர் சொன்னார்." (1 சாமு 10:21,22)**. ஆனால் ஆண்டவரோ அவரை விடவில்லை சகல ஜனங்களும் அவரை அங்கீகரிக்கும் படியாய் செய்தார், **"அப்பொழுது அவர்கள் ஓடி, அங்கேயிருந்து அவனை அழைத்துக்கொண்டுவந்தார்கள்; அவன் ஜனங்கள் நடுவே வந்து நின்றபோது, எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். அப்பொழுது சாமுவேல் எல்லா ஜனங்களையும் நோக்கி: கர்த்தர் தெரிந்துகொண்டவனைப் பாருங்கள்,**

**சமஸ்த ஜனங்களுக்குள்ளும் அவனுக்குச் சமானமானவன் இல்லை என்றான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்து: ராஜா வாழ்க என்றார்கள்."** (1 சாமு 10:23,24). தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தம்மை சிலர் கேலி செய்த பொழுது கூட அவர் அதை பெரியதாக எண்ணவில்லை (1 சாமு 10:27). காரணம் தன்னுடைய தகுதி என்ன என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆனால் இப்படி அற்புதமாக ஆரம்பித்த சவுலின் ராஜ்யபாரம், குறைந்த காலத்திற்குள்ளாகவே தடுமாற ஆரம்பித்தது. எந்த ராஜ்யபாரத்திற்கு தான் சற்றும் தகுதி உள்ளவன் அல்ல என்று தாழ்மையோடு எண்ணினாரோ, அந்த ராஜ்யபாரத்தை தக்க வைத்துக் கொள்ளவும், தான் ராஜ மேன்மையோடு, எல்லார் மத்தியிலும் புகழோடு வாழ வேண்டும் என்பதற்காக தேவனுக்கு விரோதமான காரியங்களை செய்ய தொடங்கினார். இஸ்ரவேலின் முதல் அரசனாக 40 வருடங்கள் அவர் ஆட்சி செய்தாலும், தேவன் மனஸ்தாபடும்படியான ஒரு வாழ்க்கையையே அவர் வாழ்ந்து முடித்தார். இது நம் எல்லாருக்கும் ஒரு எச்சரிப்பின் செய்தியாய் காணப்படுகிறது. இதை குறித்து நாம் இத்தியானத்தில் தொடர்ந்து காண்போம்.

அவர் இராஜ்யபாரம் பண்ணிய இரண்டாம் வருஷத்திலேயே அவர் வாழ்க்கை சரிவை சந்திக்க ஆரம்பித்தது (1 சாமு 13:1). சவுல் சாமுவேலுக்கு காத்திராமல் தானாக ஆண்டவருக்கு சர்வாங்கதகன பலி செலுத்திய போது, **"நீர் செய்தது என்ன என்று சாமுவேல் கேட்டதற்கு, சவுல்: ஜனங்கள் என்னைவிட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும், நான் கண்டபடியினாலே, கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான்."** (1 சாமு 13:11,12). ஆனால் **"சாமுவேல் சவுலைப் பார்த்து: புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்; மற்றப்படி கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான்."** (1 சாமு 13:13,14). இங்கு சவுல் செய்தது ஏதோ தன் தேசத்தை காப்பதற்காக அவர் துணிந்து செயல்பட்டதை போல் கூறினாலும், அவர் எண்ணமெல்லாம் தன் பதவியை காப்பாற்றுவதிலேயே இருந்தது. இதை நாம் அடுத்த அடுத்த நிகழ்வுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். அவர் எவ்வாறு தேவத்திட்டத்திற்கு, சித்தத்திற்கு எதிராக செயல்பட்டார்

என்பதை 1 சாமுவேல் 15 ஆம் அதிகாரத்தில் நான் காணலாம். 1 சாமு 15:1-3 வசனங்கள் கூறுகிறது “பின்பு சாமுவேல் சவுலை நோக்கி: இஸ்ரவேலராகிய தம்முடைய ஜனங்கள்மேல் உம்மை ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினாரே; இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும்: சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன். இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்“. 1 சாமு 15:13 கூறுகிறது “சாமுவேல் சவுலினிடத்தில் போனான்; சவுல் அவனை நோக்கி: நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்; கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான்.“

ஆனால் “அதற்குச் சாமுவேல்: அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான். அதற்குச் சவுல்: அமலேக்கியரிடத்திலிருந்து அவைகளைக் கொண்டுவந்தார்கள்; ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள்; மற்றவைகளை முற்றிலும் அழித்துப்போட்டோம் என்றான். அப்பொழுது சாமுவேல்: அந்தப் பேச்சை விடும், கர்த்தர் இந்த இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன் என்று சவுலோடே சொன்னான். அவன்: சொல்லும் என்றான். அப்பொழுது சாமுவேல்: நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே. இப்போதும் கர்த்தர்: நீ போய் அமலேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கித் தீருமட்டும், அவர்களோடு யுத்தம்பண்ணு என்று சொல்லி, உம்மை அந்த வழியாய் அனுப்பினார். இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான்.“ (1 சாமு 15:14-19). இதற்கு பிரதியுத்தரமக “சவுல் சாமுவேலை நோக்கி: நான் கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்ப் போய், அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைக் கொண்டுவந்து, அமலேக்கியரைச் சங்காரம் பண்ணினேன். ஜனங்களோ உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக, கொள்ளையிலே

**சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள் என்றான்.“ (1 சாமு 15:20,21).** இங்கு மறுபடியும், மறுபடியும் ஆண்டவர் என்ன சொன்னார் என்பதை விட, தனக்கு கிடைத்த கொள்ளை பொருளை, ராஜ மேன்மையை அவர் பெரியதாக எண்ணினார். ஆனால் அதை மறைக்க அவர், மறுபடியும் மறுபடியும் ஆண்டவருக்காகவே அதை செய்ததாக கூறினார். **“அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம். இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்.“ (1 சாமு 15:22,23).**

இங்கு சாமுவேல் தெளிவாக கர்த்தருடைய வார்த்தையின் முக்கியத்துவத்தையும், அதை மீறியதால் ராஜ மேன்மையே பறிக்கப்பட்டு போகும் என்றும் கூறினார். இதை கேட்ட சவுல் **“நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன்; நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன். இப்போதும் நீர் என் பாவத்தை மன்னித்து, நான் கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும் என்றான்.“ (1 சாமு 15:24,25).** இங்கு அவர் தமது தவறுக்காக மனஸ்தாபப்படுவதைப் போல் கூறினாலும், அவர் உண்மையாக அதை கூறவில்லை என்பதை பின்வரும் வசனங்கள் நமக்கு காண்பிக்கிறது. **“சாமுவேல் சவுலைப் பார்த்து: நான் உம்மோடேகூடத் திரும்பிவருவதில்லை; கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தீர்; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, கர்த்தர் உம்மையும் புறக்கணித்துத் தள்ளினார் என்றான். போகும்படி சாமுவேல் திரும்புகிறபோது, சவுல், அவன் சால்வையின் தொங்கலைப் பிடித்துக்கொண்டான், அது கிழிந்துபோயிற்று. அப்பொழுது சாமுவேல் அவனை நோக்கி: கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு; உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார். இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம்மாற அவர் மனுஷன் அல்ல என்றான்.“ (1 சாமு 15:26-29).** இங்கு சாமுவேல் தெளிவாக ஆண்டவருடைய திட்டத்தை பற்றி கூறினார். ஆண்டவர் தமக்கு பிரியமான மற்றொருவரை சவுலுக்கு பதிலாக தெரிந்தெடுப்பார் என்று. ஆனால் சவுல் அதை

அப்பொழுது பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை. காரணம் தான் இல்லாவிட்டால் தன் மகனாகிய யோனத்தான் தான் அடுத்தது ராஜாவாக வருவான் என்று எண்ணினார். **"அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள்." (1 சாமு 18:7)** என்ற ஆர்பரிப்பை அவர் கேட்கும் வரை, அவர் தனக்கு எதிரி யாரும் இல்லை என்று எண்ணினார். இதனால் சாமுவேல் சொன்னதை குறித்து கவலைப்படாமல், **"அதற்கு அவன்: நான் பாவஞ்செய்தேன்; இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணி, நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும் என்றான். அப்பொழுது சாமுவேல் திரும்பிச் சவுலுக்குப் பின்சென்றான்; சவுல் கர்த்தரைப் பணிந்துகொண்டான்." (1 சாமு 15:30,31).** இங்கு என்னைக் கணம் பண்ணி என்னும் வார்த்தையில், அவர் தான் ராஜாவாக, தன்னுடைய கனத்தை சாமுவேலிடம் எதிர்பார்த்தார். சாமுவேலுக்கு முன்பாக, தான் ஒன்றும் அற்றவன் என்று அறிக்கை செய்த அதே சவுல், இன்று நீர் வந்து என்னை கனம் பண்ண வேண்டும் என்று கூறுவதில் இருந்து, அவர் ராஜமேன்மையை குறித்தும், அதிகாரத்தை குறித்தும், அதனால் கிடைக்கும் சுகபோகமான வாழ்வை குறித்தும் கவலைப்பட்டார் என்பது தெளிவுப்படுகிறது. **1 சாமு 15:35 கூறுகிறது "சவுல் மரணமடையும் நாள்மட்டும் சாமுவேல் அப்புறம் அவனைக் கண்டு பேசவில்லை; இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதினிமித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.".** ஆம், ஆண்டவர் எவ்வாறு **"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது." (ஆதி 6:5,6).** இங்கு எப்படி மனஸ்தாபப்பட்டு அனைவரையும் அழித்துவிட்டு, நோவாவை ஆண்டவர் காக்க நினைத்தாரோ, அதைப்போல் சவுலை அகற்றிவிட்டு, தாவீதை தெரிந்து கொள்ளும்படியான செயலையும் ஆண்டவர் உடனே தொடங்கினார்.

**"அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள்முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்; சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான்." (1 சாமு 16:13).** கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து தங்கி இருந்தார் என்று சொல்லப்பட்ட வசனத்தின் அடுத்த வசனம் கூறுகிறது **"கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத**

**ஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது.“ (1 சாமு 16:14).** இதில் ஒரு அற்புதமான தேவ செயல் என்னவென்றால், சவுலை பொல்லாத ஆவியின் அலைக்கழிப்பிலிருந்து காப்பாற்ற, தேவன் நேரடியாக தாவீதையே அவரிடம் அனுப்பினார். இங்கு சவுலுக்கு அருமையான ஒரு தருணம் கொடுக்கப்படுகிறது, கர்த்தர் தாவீதோடு இருக்கிறார் என்பதை நேரடியாக சவுல் உணர்ந்து கொள்கிறார். எனவே பிற்காலத்தில் தனக்கு பின் தாவீதை ஆண்டவர் தெரிந்து கொண்டதை அவர் ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவருடைய பதவி ஆசை அவரை தேவனுக்கு எதிராக செயல்பட வைத்தது.

**“அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள். அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்கமாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான். தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் இறங்கிற்று; அவன் வீட்டிற்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருந்தான்; அப்பொழுது தாவீது தினந்தோறும் செய்கிறபடி, தன் கையினால் சுரமண்டலத்தை வாசித்துக்கொண்டிருந்தான்; சவுலின் கையிலே ஈட்டியிருந்தது. அப்பொழுது சவுல் தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடுவேன் என்று ஈட்டியை அவன்மேல் எறிந்தான்; ஆனாலும் தாவீது விலகி இரண்டுதரம் அவனுக்குத் தப்பினான். கர்த்தர் தாவீதோடேகூட இருக்கிறார் என்றும் தன்னை விட்டு விலகிப்போனார் என்றும், சவுல் கண்டு, தாவீதுக்குப் பயந்து, அவனைத் தன்னைவிட்டு அப்புறப்படுத்தி, அவனை ஆயிரம்பேருக்கு அதிபதியாக வைத்தான்; அப்படியே அவன் ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருந்தான். தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடேகூட இருந்தார். அவன் மகா புத்திமானாய் நடக்கிறதைச் சவுல் கண்டு, அவனுக்குப் பயந்திருந்தான். இஸ்ரவேலரும் யூதா ஜனங்களுமாகிய யாவரும் தாவீதைச் சிநேகித்தார்கள்; அவர்களுக்கு முன்பாக அவன் போக்கும் வரத்துமாயிருந்தான்.“ (1 சாமு 18:7-16).** இங்கு சவுல் தான் பெலிஸ்தியரை வென்றதைக் குறித்து சந்தோஷப்படுவதை பார்க்கிலும், தன்னைவிட தாவீது உயர்ந்து விடுவாரோ, தன்னுடைய ராஜ்ஜிய மேன்மை பறிக்கப்பட்டு போகுமோ என்றே கவலைப்பட்டார். **“அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்கமாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்.” (வசனங்கள் 8,9)** என்பது அவரின் மன நிலையை தெளிவாக வெளிப்படுத்துகிறது. மேலும் தாவீதைக் கொல்ல நினைத்தும் அது

முடியாமற்போனதும், **"கர்த்தர் தாவீதோடேகூட இருக்கிறார் என்றும்" (வசனம் 12),** அவர் நிச்சயித்துக் கொண்டபடியினால், தேவத்திட்டத்திற்கு எதிராகவே செயல்பட தொடங்கினார். **"என் கை அல்ல, பெலிஸ்தரின் கையே அவன்மேல் விழட்டும் என்று சவுல் நினைத்துக்கொண்டு," (1 சாமு 18:17),** அவர் செய்ய நினைத்ததெல்லாம் இறுதியில் அவருக்கு எதிராகவே முடிந்தது. **"கர்த்தர் தாவீதோடிருக்கிறார் என்று சவுல் கண்டறிந்துகொண்டான்; சவுலின் குமாரத்தியாகிய மீகாளும் அவனை நேசித்தாள். ஆகையால் சவுல் இன்னும் அதிகமாய்த் தாவீதுக்குப் பயந்து, தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான்." (1 சாமு 18:28,29).** தன் மகள் மீகாள் தாவீதற்கு மனைவியானதும், தன் மகனாகிய யோனத்தான் தாவீதை தன் உயிரை போல சிநேகித்ததும், இஸ்ரவேலரும் யூதா ஜனங்களும் யாவரும் தாவீதை சிநேகித்ததும், எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தர் தாவீதோடு இருப்பதை அவர் தெரிந்திருந்தும், தான் என்ற எண்ணமும், ராஜமேன்மையும், அவரை தேவ திட்டத்திற்கு எதிராக செயல்பட தூண்டியது. தாவீதின் மூலமாய் தன் நாடு காக்கப்பட வேண்டும் என்பதை காட்டிலும், தாவீதை அழிப்பது மூலமாய் தன் அரச பதவி காக்கப்பட வேண்டும் என்பதே அவர் எண்ணமாய் இருந்தது. இதனால் எதிரிகளை அழித்து நாட்டை காப்பாற்றுவதை விட்டுவிட்டு, தாவீதை பின்தொடர்ந்து அவரை கொல்வதையே நோக்கமாக கொண்டிருந்ததால், இறுதியில் அவரும், அவர் தன்னுடைய அடுத்த வாரிசாக நினைத்த அவர் மகன் யோனத்தானும் ஒன்றாக போரில் மடிந்தனர். பின்வரும் தியானங்களில் சவுலை குறித்து தொடர்ந்து தியானிப்போமாக, ஆமென், அல்லேலூயா.